Lakeridge Health

**May மே 22, 2020**

**அன்புள்ள நண்பர்களே, அயலோரே,**




எமது COVID-19 அனுபவத்தில் கடந்தவாரம் ஒரு முக்கிய மைல்கல்லை அடையாளப்படுத்தியது. இந்தப் புதிய வைரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆபத்துகளைக் கையாளும் வேளையில், பலரும் வசந்தகாலத்தின் எளிமையான இன்பங்களான  கோல்ஃப், வேகநடைப்பயிற்சி போன்ற சிலவற்றை Durham டூர்றமினது பேணப்பட்ட காட்சிப் பரப்புகளில் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கக்கூடியதாக இருந்தது.

மொத்தத்தில், உலகின் ஏனைய பகுதிகளில் உணரப்பட்ட COVID-19 இனது தீவிரமான தாக்கங்களிலிருந்து Durham Region டூற்ராம் பிரதேசமும் Ontario ஒன்ராறியோவும் காப்பாற்றப்பட்டுள்ளன. எமது சமூகத்தில் ஏற்பட்டது உட்பட நீண்டகால பராமரிப்பு (LTC) மற்றும் ஓய்வுபெற்றோர் வாழும் இல்லங்களில் ஏற்பட்ட பாரிய அழிவுதந்த நோய்த்தொற்று என்பதே இதற்கான வெளிப்படையான விதிவிலக்காகும். பல நீண்டகால பராமரிப்பு இல்லங்கள் நோய்த்தொற்றின் இறுதியை அண்மைய வாரங்களில் அறிவிப்பதன் காரணமாக, இந்த இல்லங்களில் வாழ்பவர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சமூகத்தில் பரவலாக ஆதரவளிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள், வெற்றியைக் காட்டியுள்ளன. ஆனாலும், எதிர்காலத்தில் நிறையவே வேலைகள் இன்னமும் உள்ளன.

**Durham Region டூர்றாம் பகுதி மற்றும் Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தில் இந்தப் பெருநோய்ப் பரவலின் தாக்கம்**

Durham Region டூர்றாம் பிரதேசத்தில் (மே May 22) வரை காணப்பட்ட 1318 நோயாளர்களில், 988 பேர்கள் இப்போது குணமடைந்துள்ளதுடன் கடந்த மாதத்தில் புதிய நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தும் வந்துள்ளது. இந்த எண்ணிக்கைகள் நாம் சரியான திசையில் சென்றுகொண்டிருப்பதை எமக்குக் கூறுகின்றன. இருப்பினும் நோயாளர்களின் எண்ணிக்கை விரைவாகக் குறைய வேண்டும் என்றே நாமெல்லோரும் விரும்புவோம். மேலும், தொடர்ந்தும்

கடைப்பிடிக்கவேண்டிய கவனமெடுப்பினை எம் எல்லோருக்கும் ஞாபகப்படுத்தியவாறு, இந்த வாரம் தினசரி புதிய நோயாளர்களின் எண்ணிக்கையில் சிறியதொரு உயர்ச்சியை நாம் கண்டோம். தற்போதைய COVID-19 தரவுகளுக்கு Durham Region Health Department டுர்றாம் பிரதேச ஆரோக்கியத் திணைக்களத்தின் **https://www.durham.ca** இணையத்தளத்தைப் பாருங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இற்றைவரையிலான வெற்றிக்குக் காரணம், தொற்றுப் பரவலைத் தடுக்க, கூட்டாகச் சமூகம் எடுத்த செயல்பொறுப்புணர்வேயாகும். அன்புக்குரியவர்களைப் பிரிந்திருக்க வேண்டிய தனிப்பட்ட சிரமத்திற்கு மத்தியிலும் - உடல்சார் தூரப்படுத்தலை மக்கள் கடைப்பிடிக்கின்றனர். சமூகத்தின் பல அங்கத்தவர்களும் இயலுமானவரை வீட்டிலேயே தங்கி இருப்பதுடன் கைகளைக் கழுவுவதையும், எம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஏனைய முன்னெச்சரிக்கைகளையும் உறுதியாகக் கடைப்பிடிக்கின்றனர்.

இன்றைய தேதியில், Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தில் COVID-19 க்கென அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் ஒரு கணிசமான உயர்ச்சி காணப்படவில்லை. கடந்த மாதத்தில், எந்த ஒரு குறிப்பிட்ட நாளிலும் 20-40 வரையிலானோர் COVID-19 காரணமாக Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டனர். இந்நோயாளர்களில் அநேகமாக எல்லோரும் எமது விசேட COVID-19 பிரிவுகளில் பராமரிப்புப் பெற்றனர். இவர்களில் சிலருக்கு எமது Intensive Care Units அதிதீவிர பராமரிப்புப் பிரிவுகளில் வழங்கப்படும் விசேட பராமரிப்புத் தேவைப்பட்டது.

மருத்துவமனை அமைப்பிலுள்ள எம் அனைவருக்கும், மிக அர்த்தமுள்ள நாட்களில் சில, எமது நோயாளர்கள் வீட்டிற்குத் திரும்புமளவிற்குக் குணமடைதல் என்பதாகும். இது COVID-19 கொண்டோருக்கும் விசேடமாகப் பொருந்தும். மருத்துவமனையில் தங்கியிருந்த பின்னர் COVID-19 கொண்ட 119 பேர் கடந்த சில மாதங்களில் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணக்கையின் போக்குக் குறைந்துவருவதால், நாம் எமது சமூகங்களுக்குச் சேவைபுரியக் கூடிய – அதாவது விருப்பத்துக்குரிய சத்திரசிகிச்சைகளுக்கு நேரம் குறித்தல், எமது வெளிநோயாளர் பிரிவுக்கு நோயாளர்களை ஏற்கும் நிலை மற்றும் சமூக நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கான செயல்நிலை வசதிகள் அதிகரிக்கின்றன.

இந்தப் பெருநோய்த் தாக்கம் இன்னும் பல மாதங்களுக்கு நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றதுடன் இன்னும் பல புதிய நோய்த்தொற்று அலைக்காலங்களும் இருக்கலாம்.

Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் ஆயத்தமாக உள்ளது.

தேவை ஏற்படின், விரைவாக எமது இடத்தை விரிவாக்க, அலுவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, எமது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களைச் சேமிக்க, மேலும் நூற்றுக்கணக்கான கட்டில்களைச் சேர்க்க ஆயத்தமாயுள்ள ஒரு ‘திடீர்ப்பெருக்கநிலை’த் திட்டத்தை எமது குழு உருவாக்கியுள்ளது.

**சத்திரசிகிச்சைகள் மற்றும் செயன்முறைகளைத் தொடங்க உள்ள திட்டங்களின் இன்றையநிலைச் செய்தி**

Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பிற்போடப்பட்டுள்ள பல விருப்பத்தெரிவிற்குரிய சத்திரசிகிச்சைகளையும் செயன்முறைகளையும் தொடங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்துவருகின்றது. நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சைகளின் போதும், முன்னரும், பின்னரும் ஆதரவளிக்கக்கூடியவகையில், மூலவளங்கள் எல்லாம் உள்ளதை உறுதிப்படுத்துமுகமாக, எமது பிரதேசப் பங்காளிகளான, வீட்டு மற்றும் சமூதாயப் பராமரிப்பாளர்கள், முதன்மையான பராமரிப்பாளர்களுடன் நெருங்கிய முறையில் இத்திட்டம் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

அத்துடன் வருகின்ற வாரங்களில், Durham Region டுர்றாம் பிரதேசம், COVID-19 எனச் சந்தேகிக்கக்கூடிய – மிகச் சாதுவான அறிகுறிகள் தன்னிலும் கொண்ட எவருக்கும், பரிசோதனை செய்தலை அதிகரிக்கவுள்ளது. தயவுசெய்து உங்கள் மருத்துவரைத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது ஒரு மதிப்பீட்டிற்கு ஒழுங்கு செய்வதற்கென Lakeridge Health’s லேக்றிச் ஆரோக்கிய நிலைய இணையத்தளத்திலுள்ள COVID-19 மதிப்பீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

**COVID-19 இனை வெல்வதில் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்குண்டு**

நாமெல்லோரும் இந்தக் கடினமான தியாகங்களைத் தொடர்ந்து செய்தால், எமது குடும்ப அங்கத்தினர், நண்பர்கள், அயலோரை இக்கொடிய வைரஸிலிருந்து பாதுகாக்கலாம். அத்துடன் எமது பங்கினைச் செய்வதற்கான எமது ஒன்றுசேர்ந்த செயலுறுதிப்பாடானது COVID-19 இனது பரவலைத் தடுத்து, பொருளாதாரத்தை மீளத்திறக்க வழிவகுக்கும்.

உதவுவதற்குப் பல வழிகள் உள்ளன. *Durham Fights COVID-19* டுர்றாமின் COVID-19 போராட்டப் பிரசாரத்திற்கு நிதிஉதி வழங்க www.durhamfightscovid19.ca

இணையத்தளத்திற்குச் செல்லுங்கள். நோயாளர்களின் அனுபவத்தை முன்னேற்ற, மருத்துவ உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு உபகரணங்களை எமது குழுக்கள் பெறவென, எமது உள்ளூர் மருத்துவமனைகளுக்கு இதுவரையில் $850,000 வரையிலான நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

எமது உன்னதமான குழுவினது அயராத ஆதரவுக்கும் ஊக்கமளிப்புக்கும் எமது நன்றி. நாமெல்லோரும் பெருமளவில் நன்றியுடையவர்களாவோம்!

அத்துடன் Durham Region டுர்றாம் பிரதேசத்தை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்கு எமது நன்றி! சமூகம்சார் தூரப்படுத்தலைப் பின்பற்றும்போது, வெளியில் செல்வதும் நல்ல காலநிலையை அனுபவிப்பதும் முழுமையாகப் பாதுகாப்பானது என்பதை மறந்துவிடாதீர்கள்.

உங்களது நல்லாரோக்கியத்துக்கு வாழ்த்தும்,

Susan deRyk
Interim President and CEO
சுசன் டிரைக்
இடைக்காலத் தலைவர்,
பிரதம நிறைவேற்று அலுவலர்

Tony Stone
Chief of Staff
ரோனி ஸ்ரோன்
அலுவலர்கள் தலைவர்